இறைவனின் இறுக்கிறான் என்பது அறிவியல் ரீதியாக நிருபிக்கப்பட்ட விஷயம். அதே போல், அறிவியல் ரீதியாக மறுமை வாழ்க்கை சாத்தியமானது என்பதை பார்க்கலாம். நம்மைச் சுற்றியிருக்கும் விஷயங்களை ஆராய்வதற்கு எம்மாதிரியான விஞ்ஞான கோட்பாடுகளைப் பின்பற்றுவோமோ அதே கோட்பாடுகளையே இவ்விஷயத்திலும் பயன்படுத்தலாம்.

## அர்த்தமுள்ள பிரபஞ்சம்

ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ் அவர்கள் பிரபஞ்சத்தை பற்றி குறிப்பிடும் போது, இந்த பிரபஞ்சத்தை படைத்தவன் ஒரு கணக்கியல் மேதையாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இதனுடன் இணைத்து பார்த்தோமானால், இதன் அடிப்படை தத்துவமே இவ்வளவு அர்த்தமுள்ள பிரபஞ்சம் படைக்கப்பட்டதற்கான நோக்கமும் நிச்சயமாக பெற்று இருக்கும். அது போன்றதொரு உயர் நோக்கத்தை கொண்ட படைப்பாளன் நிச்சயமாக இந்த பிரபஞ்சத்தை முழு நிறைவின்மை அற்றதாகவோ, அர்த்தம் இல்லாமலோ படைத்திருக்க மாட்டான்.

இந்த பிரபஞ்சத்திற்குப் பின்னால் ஒரு அர்த்தம் இருந்தாலும் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகம் இப்போதைய சூழ்நிலையைப் பொறுத்த வரையில், முழுமையற்றதாகவே இருக்கின்றது. இது முழுமையைப் பெற வேண்டுமென்றால், இதற்கு இன்னொரு உலகமும் தேவைப்படுகிறது. அதையே மறு உலக வாழ்வு என்பதாக எல்லா இறைத்தூதர்களும் சொல்லி விட்டு சென்றனர். அந்த மறு உலக வாழ்க்கை மீதான நம்பிக்கை வெறும் மதக் கொள்கை மட்டுமல்ல; மாறாக, விஞ்ஞானபூர்வ உண்மையென்றும் கூறலாம்.

இந்த பிரபஞ்சத்திற்குப் பின்னால் ஒரு அர்த்தம் இருந்தாலும் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகம் இப்போதைய சூழ்நிலையைப் பொறுத்த வரையில், முழுமையற்றதாகவே இருக்கின்றது.

## அறிவியல் அடிப்படை என்ன?

முதலில் அறிவியல் ஆதாரம் என்றால் என்ன என்பதை புரிந்துக் கொள்வோம். ஒரு விஷயம் விஞ்ஞானபூர்வமாக நிருபிக்கப் பட்டு விட்டது என்று கூறுவது, அந்த விஷயம் உண்மை தான் என்பதற்கான சாத்தியக்கூறுகள் நிறுவப்பட்டன என்பதையே குறிப்பிடுகின்றது. மாறாக அவற்றை ஆய்வு செய்ததன் முடிவாக கிடைத்த உறுதியான ஞானத்தின் அடிப்படையில் அல்ல. இதற்கு உதாரணமாக அணுவின் கட்டமைப்பை குறிப்பிடலாம்.

ஒரு விஷயத்தை ஆராய்வதற்காக நாம் பின்பற்றும் ஆய்வு முறை என்பது 3 வகையானது. ஆதாரங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படும் அல்லது நிராகரிக்கப்படும், அனுமானித்தல் கூர்ந்து கவனித்தல், ஒப்பிட்டு பார்த்தல் ஆகியவை.

மேற்குறிப்பிட்ட மூன்று அம்ச விதியால் மறுமையைப் பற்றி ஆய்வு செய்யும் போது அதன் சாத்தியக்கூறுகளின் விஷயத்தில் ஒரு உறுதியான தீர்மானத்தை அடைய முடியும். ஒரு விஷயத்திற்கான சாத்தியக் கூறுகள் அறிவியலில் அது நிகழ்வதற்கான ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## மனிதன் தான் ஆசைப்படும் அனைத்தையும் அடைந்து விட முடியுமா?

மனித சமுதாயத்தின் மீது நிகழ்த்தப்பட்ட ஆய்வின் மூலம் தெரிய வந்திருப்பது என்னவென்றால், எல்லா ஆண்களும், பெண்களும் தங்கள் வாழ்க்கை முழுவதும் இரண்டு முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாகவே வாழ்க்கையைக் கழிக்கின்றனர். ஒரு பக்கம், எல்லையற்ற ஆசைகளால் ஆட்கொள்ளப்பட்டு தங்களுக்கான கற்பனை உலகத்தை நிர்மாணித்துக் கொள்ள விரும்புகின்றனர். தங்களது விருப்பங்களை மட்டுமே உள்ளடக்கியதொரு கனவு உலகம். ஆனால் அதே சமயத்தில், தன்னைச் சுற்றிலும் தனக்கு விருப்பமான அனைத்து விஷயங்களையும் காண முடிந்தாலும் அவனால் அவற்றை அடைந்து கொள்ள முடிவதில்லை. தனக்கு விருப்பமான கனவு உலகத்தை நிர்மாணித்துக் கொள்வதில் தோல்வியடைந்து விடுகின்றான். சுமார் நூறு வருட ஆயுளுக்குள் தோல்வி, நட்டம், விரக்தி மற்றும் மன உளைச்சலையே பெரும்பாலான மனிதர்கள் பரிசாகப் பெறுகின்றனர். இது தான் இவ்வுலகத்தில் வாழும் ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும் நிகழ்கின்றது.

பிரபலமான அமெரிக்க உதாரணம் மூலமாக இதை புரிந்து கொள்ள முயற்சிப்போம் :

பிரபல அமெரிக்க பிரச்சாரகரான பில்லி கிரஹாம் என்பவருக்கு அமெரிக்காவின் மிகப் பெரிய கோடீஸ்வரரிடமிருந்து உடனடியாக வந்து சந்திக்குமாறு ஒரு அவசர அழைப்பு வந்திருந்தது. அந்த அழைப்பு வந்த போது பில்லி கிரஹாம் அவர்கள் தனது அனைத்து சந்திப்புகளையும் ரத்து செய்து விட்டு அந்த கோடீஸ்வரரைச் சந்திக்க விரைந்தார்.

அவர் அந்த கோடீஸ்வரரின் மாட மாளிகையை அடைந்ததும் ஒரு தனி அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே அவ்விருவரும் ஒருவரையொருவர் பார்த்தவாறு நேருக்கு நேர் அமர்ந்து கொண்டனர். பிறகு அந்த கோடீஸ்வரர், மிகவும் வருத்தத்தோடு, நான் முதியவனாக ஆகி விட்டேன், இனி வாழ்க்கையில் எனக்கு எதுவுமே இல்லை, நான் அறியாத கண்டிராத இடத்திற்கு பயணிக்கப் போகிறேன். உங்களால் எனக்கு ஏதேனும் நம்பிக்கையைத் தர முடியுமா? என்று கேட்டார்.

இது போன்றதொரு விரக்தி அந்த அமெரிக்க கோடீஸ்வரரின் வாழ்க்கையில் மட்டும் நிகழ்ந்தது அல்ல. இவ்வுலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு சூழ்நிலையில் இது போன்றதொரு விரக்தியை அடைந்தே தீருகின்றான்.

நாம் இந்த பிரச்சனையை இந்த பிரபஞ்சத்தில் இயங்கி கொண்டிருக்கும் ஜோடித்தன்மை என்ற தத்துவத்தின் படி அணுக இயலும். இவ்வுலகத்தில் ஒவ்வொன்றுமே ஜோடியாகவே படைக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொன்றுமே ஜோடி சேரும் போது தான் முழுமைப் பெறுகின்றது. அணுக்கருவில் நேர் மற்றும் எதிர் விசை, ஆண் மற்றும் பெண் என்று மனிதன் மற்றும் விலங்கினம், அவ்வளவு ஏன் தாவரங்கள் செடி, கொடி, மரம் கூட அப்படியே. ஆகவே உலகம் என்ற இந்த நிகழ்வுக்கு, இணையான மேம்பட்ட மறு உலகம் எங்கோ இருக்க கூடும். அந்த மறு உலக உருவாக்க தோற்றம் ஏதோ ஒரு வகையில் இந்த உலகோடு தொடர்புடையது.

இவ்வுலகத்தில் ஒவ்வொன்றுமே ஜோடியாகவே படைக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொன்றுமே ஜோடி சேரும் போது தான் முழுமைப் பெறுகின்றது.

இணையான மேம்பட்ட மறு உலகம் எங்கோ இருக்க கூடும். அந்த மறு உலக உருவாக்க தோற்றம் ஏதோ ஒரு வகையில் இந்த உலகோடு தொடர்புடையது

இந்த தத்துவத்தை நாம் ஏற்றுக் கொள்ளும் போது அனைத்தும் அர்த்தமுள்ளதாக மாறி விடுகின்றது. மரணத்திற்குப் பின் வர இருக்கும் உலகத்தை நாம் நம்பாமல் போகும் போது நமது வாழ்க்கைப் பற்றிய கேள்விக்கான பதில் கிடைக்காமலேயே போய் விடுகின்றது.

## சரியான திட்டப்பணி

இணை உலகிற்கான அடிப்படையான திட்டப்பணிகளை நாம் இப்பொழுது புரிந்து கொள்ள முயற்சிப்போம். அந்த வகையில் சொர்க்கம், நரகம் என்றால் என்ன என்பதும் தெள்ளத்தெளிவாக விளங்கி விடும். சொர்க்கம் என்பது உண்மையான நேர்மையான மனிதர்களுக்கான தங்குமிடமாகவும் நரகம் என்பது கொடிய மற்றும் பொய்யான மனிதர்களுக்கான தங்குமிடமாகவும் இருக்கின்றது.

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்போதைய உலகமானது, மனிதனை அவன் சுய விருப்பப்படி செயல்பட வைத்து அவனைச் சோதிப்பதற்கான களமாகவும், மறுமை உலகமானது அவனது பூலோக வாழ்க்கையின் நடைமுறைகளுக்கான பிரதிபலனாகவும் படைப்பாளன் இவ்விரு உலகங்களையும் ஏற்படுத்தி உள்ளான்.

நமது உடல் நிலையற்றதாக இருந்தாலும் நமது ஆன்மா, நமது சிந்தனை நிலையானது என்பதை நாம் இந்த இடத்தில் மறந்து விடக் கூடாது. மனிதனின் உடற்கூறியல் (Physiology) ஆய்வு நமக்கு கூறுவது என்னவென்றால், நமது உடலானது எண்ணற்ற உயிரணுக்களால் உருவாகியுள்ளது. அவை தடையின்றி மாறிக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறு நமது உலகமானது ஒரு குறிப்பிட்ட காலத்தின் அடிப்படையில் தொடர்ந்து சுழற்சியடைந்து வருகின்றது. நமது உடலின் சுழற்சி

நீரின் சுழற்சியை ஒத்த தன்மையைக் கொண்டிருக்கிறது.

நமது உடல் மரணித்த விட்டாலும் நமது ஆன்மா மட்டும் எவ்வித மாற்றமும் இன்றி மரணிக்காமல் வாழ்கின்றது. ஆன்மாவானது உடலைச் சாராத ஒன்றாக இருப்பதே இதற்கு காரணமாகும்.

அது போன்ற எதிர்மறையான சூழ்நிலைகளிலும் நேர்மறையாக வாழ்ந்துகாட்ட இயலும் என்பதை மனிதன் நிருபிக்க வேண்டும். எவரொருவர் இறுதி வரையிலும் நேர்மறையாக செயல்படும் திறனைக் கொண்டிருந்தாரோ அவரே சொர்க்கத்தில் நுழையத் தகுதி பெற்றவராவார். மற்றவர்கள் மீள வழியில்லாத நரகத்தில் தள்ளப்படுவர்.

மனித உடற்கூறுவியல் (Physiology) ஆய்வு கூறுகிறது.

இவ்வுலகத்தில் இருக்கும் அனைத்தும் மனிதன் தன்னைப் பண்படுத்தி கொள்வதற்கு ஏற்ற வகையில் அமைந்திருந்தாலும், இவ்வுலகத்தில் இருக்கும் அனைத்தும் மனிதனுக்கான சோதனைக் களம் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்த உலகம் மிகவும் கசப்பானதாகவும் முரண்பட்டதாகவும் காணப்பட இது கூட ஒரு காரணமாக இருக்கலாம். இவ்வுலகத்தில் நாம் எதிர்க் கொள்ளும் எதிர்மறையான அனுபவங்கள் அனைத்துமே நமக்கு வைக்கப்பட்ட சோதனைகளாக இருக்கின்றன. அது போன்ற எதிர்மறையான சூழ்நிலைகளிலும் நேர்மறையாக வாழ்ந்து காட்ட இயலும் என்பதை மனிதன் நிருபிக்க வேண்டும் எவரொருவர் இறுதி வரையிலும் நேர்மறையாக செயல்படும் திறனைக் கொண்டிருந்தாரோ அவரே சொர்க்கத்தில் நுழையத் தகுதி பெற்றவராவார். மற்றவர்கள் மீள வழியில்லாத நரகத்தில் தள்ளப்படுவர்.

## திருப்தியளிக்கும் விளக்கம்

வினைபலன் தத்துவத்தின் அடிப்படையில் பார்க்கும் போது, நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த உலகம் எவ்வித அர்த்தமும் இன்றி வீணுக்காக படைக்கப்பட்டு இருக்கும் என்று கூற இயலுமா? சூரியனைப் பாருங்கள், சந்திரனை பாருங்கள், மிகச் சிறிய பூச்சியை பாருங்கள், இவையெல்லாம் யாதொரு காரணமும் இன்றி படைக்கப்பட்டன என்று கூற இயலுமா?

உண்மையில், ஒவ்வொன்றும் ஒரு காரணத்திற்காகவே படைக்கப்பட்டிருக்கும் என்று தான் என் உள் மனம் கூறுகின்றது. ஒவ்வொரு மனிதனும் ஒரு நோக்கத்திற்காக படைக்கப்பட்டவனே. இருப்பினும் அந்த நோக்கம் இந்த உலகத்திலேயே முழுமையடைந்து விடப் போவது இல்லை. எதிர்ப்பார்ப்புகள் எண்ணற்றவையாக இருக்கின்ற காரணத்தினால், அவை முழுமையான முறையில் நிறைவேற வேண்டுமென்றால் அது மறுமை உலகில் மட்டுமே சாத்தியப்படும் அதுவே சொர்க்கம்.

சொர்க்கம் என்றால் என்ன? இந்த கேள்வி நம் முன் எழுகிறது. சொர்க்கம் என்பது மனித தேடலின் முடிவு. மிக பிரமாண்டமான, குறையே இல்லாத, தன்னளவில் முழுமையான பிரபஞ்சம் ஆகும்.

இந்த பிரபஞ்சம் எங்கும் நிச்சயங்களால் ஆனவை. மாறாக மனித வாழ்வோ நிச்சயமின்மை கொண்டவை.. பிரபஞ்சத்திற்கு பயம் என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் மனிதனோ தொடர்ச்சியாக பயத்தால் பாதிக்கப்படுகின்றான். மனிதனோ இந்த உலகில் உள்ள படைப்புகளிலேயே மிகவும் துக்கம் மிக்கவனாக, தான் அடைய நினைத்ததை பெற முடியாத சம நிலையற்றவனாக இருக்கிறான். அதை விட மேலாக, இந்த பிரபஞ்சம் தீய எண்ணம் இல்லாததாக இருக்கிறது. ஆனால் மனிதனோ தீய எண்ணங்களால் உழல்கிறான். காரணம் அவன் தனக்கு அளிக்கப்பட்ட சுதந்திரத்தை தவறாக பயன்படுத்துகிறான்.

சொர்க்கம் என்பது மனித தேடலின் முடிவு. மிக பிரமாண்டமான, குறையே இல்லாத, தன்னளவில் முழுமையான பிரபஞ்சம் ஆகும்

சொர்க்கம் மட்டுமே இவ்வினைத்திற்கும் உரிய சரியான பதிலாக இருக்கின்றது. சொர்க்கம் என்ற கொள்கை, இந்த பிரபஞ்சத்தைப் போன்று மனிதனாலும் தனக்கு விருப்பமான அனைத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதைக் காட்டுகிறது. இந்த பிரபஞ்சமானது தனக்கு தேவையானவற்றை இன்றே பெற்றுக் கொள் கின்றது. மனிதன் மட்டும் தனக்கு இன்று தேவையான அனைத்தையும் “நாளை“ சொர்க்கத்தில் பெற்றுக் கொள்பவனாக இருக்கின்றான்.

- **மவுலானா வஹிதுத்தீன் கான்**

For more information, contact : TL 08

GOODWORD

324, Triplicane High Road,
Chennai - 600 005.
☏ +91-44-4352 4599
+91 97908 53944
✉ chennaigoodword@gmail.com

1, Nizamuddin West Market,
New Delhi - 110 013.
✉ info@goodwordbooks.com

goodwordbooks.com

www.alquranmission.org • www.wkhan.net
www.alrisala.org • www.cpsglobal.org

CPS International
centre for peace & spirituality

# மறு உலகம் நிலைக் கொண்டு உள்ளதா?

Does the World of the Hereafter Exist
(Tamil)